செய்திக் குறிப்பு எண்: 83 நாள் 12.7.2010

# மகளிர் மேம்பாட்டிற்கு பல திட்டங்களைத் தீட்டி சாதனை படைத்து வருபவர் தலைவர் கலைஞர்– துணை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் புகழாரம் ! ! !

* * * * * * * *

மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (12.7.2010) சாலிகிராமத்தில் சமூக நலத்துறை மூலம் புதிதாக கட்டப்பட்டுள்ள பணிபுரியும் மகளிருக்கான தங்கும் விடுதியை திறந்து வைத்து, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசியதாவது:–

சமூக நலத்துறைச் சார்பில் பணிபுரியும் மகளிருக்கான தங்கும் விடுதியை திறந்து வைப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். இந்த வாய்பை எனக்கு வழங்கிய சமூக நலத்துறை அலுவலர்களுக்கும் குறிப்பாக சமூக நலத்துறை அமைச்சர் கீதா ஜீவன் அவர்களுக்கும் எனது நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த ஆண்டு இந்த விடுதி கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டு விழாவிற்கு நான் வரவேண்டும் என்று என்னிடம் தேதி கேட்டார்கள். நானும் வருவதாக ஒத்துக் கொண்டேன். ஆனால் தொடர் மழையின் காரணமாக அடிக்கல் நாட்டு விழா இரண்டு முறை தவிர்க்கப்பட்டது. அப்போது நான் சமூக நலத்துறை அமைச்சர் அவர்களிடத்திலும், அலுவலர்களிடத்திலும் அடிக்கல் நாட்டு விழாவிற்காக விடுதிக் கட்டும் பணியினை தாமதப்படுத்த வேண்டாம். கட்டிடப்பணியை எவ்வளவு விரைவாக முடிக்க முடியுமோ, முடியுங்கள் நான் திறப்பு விழாவிற்கு நிச்சயமாக வருகிறேன் என்று உறுதி அளித்தேன். அவ்வாறு இன்று, பணிபுரியும் மகளிருக்கான விடுதியை திறந்து வைத்துள்ளேன். இவ்விழாவில் 3 ஆயிரத்து 936 பயனாளிகளுக்கு ரூ. 7 கோடியே 51 லட்சம் மதிப்பிலான நலத்திட்டங்களை வழங்கும் விழாவும் இணைக்கப்பட்டுள்ளது.

வடபழனி அருள்மிகு பழனி ஆண்டவர் திருகோயிலுக்கு சொந்தமான 5.96 ஏக்கர் நிலத்தில் இந்த விடுதி கட்டுவதற்கு 30 ஆண்டு காலம் குத்தகை அடிப்படையில் அறநிலையத் துறையிலிருந்து தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்திற்கு வழங்கப்பட்டு, முதற்கட்டமாக ரூ. 2 கோடி செலவில் இந்த விடுதி தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி வாரியத்தின் மூலம் கட்டப்பட்டுள்ளது.

இது தவிர மேலும் 5 கட்டிடங்கள் பணிபுரியும் மகளிருக்காக கட்டப்படவுள்ளது. தலைவர் கலைஞர் அரசு பல நலத்திட்டங்களை மகளிர் மேம்பாட்டிற்காக தீட்டி சாதனை செய்து வருகிறது. இந்த விழாவில் நடப்பாண்டில் 12 திருநங்கைகளுக்கு ரூ. 5900 வீதம் ரூ. 70 ஆயிரமும், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம் மூலம் 467 பேர்களுக்கு ரூ. 25 ஆயிரம் வீதம் ரூபாய் ஒரு கோடியே 16 லட்சமும், சிவகாமி அம்மையார் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின் மூலம் 400 குழந்தைகளுக்கு ரூ. 15,200 வீதம் ரூ. 60 லட்சத்து 80 ஆயிரமும், முதியோர் உதவித் தொகை 160 பேர்களுக்கு ரூ.400 வீதம் ரூ. 64 ஆயிரமும், ரூபாய் ஒரு லட்சம் செலவில் 38 பேர்களுக்கு இலவச தையல் இயந்திரமும், மொத்தம் ஆயிரத்து 77 பயனாளிகளுக்கு ரூபாய் ஒரு கோடியே 79 லட்சம் மதிப்பிலும், 2009–10 ஆம் ஆண்டிற்கு இதுபோன்ற பல்வேறு திட்டங்களின் கீழ் 2 ஆயிரத்து 859 பயனாளிகளுக்கு ரூ. 5 கோடியே 71 லட்சத்து 80 ஆயிரமும், ஆகமொத்தம் 3936 பயனாளிகளுக்கு 7 கோடியே 51 லட்சத்து 69 ஆயிரம் மதிப்பிட்டில் நலத்திட்ட உதவிகள் இன்று வழங்கப்பட்டுள்ளது. இங்கு உரையாற்றியவர்கள் தலைவர் கலைஞர் அவர்கள் மகளிர் மேம்பாட்டிற்காக பல்வேறு சாதனைகளை புரிந்துள்ளதாக கூறினார்கள். இப்போது மட்டும் அல்ல, தலைவர் கலைஞர் அவர்கள் எப்போதெல்லாம் ஆட்சியில் இருக்கின்றாரோ, அப்போதொல்லாம் பெண்கள் மேம்பாட்டிற்கு அளப்பரிய சாதனைகளை செய்துள்ளார்.

வேலைவாய்ப்பில் 30 சதவீத ஒதுக்கீடு, சொத்தில் சம உரிமை, ஆரம்பப் பள்ளிகளில் பெண்களையே ஆசிரியர்களாக நியமிப்பது, விதவை மறுவாழ்வுத் திட்டம், அதுமட்டும் அல்ல ஏழைப் பெண்களின் திருமண உதவித் திட்டமானது 1989 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு ரூ. 5 ஆயிரமும், 1996 ஆம் ஆண்டு ரூ. 10 ஆயிரமாகவும் உயர்த்தி வழங்கப்பட்டது. 2006 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலை சந்தித்த போது ரூ. 10 ஆயிரத்திலிருந்து ரூ. 15 ஆயிரமாக திருமண உதவித் திட்ட நிதியினை உயர்த்தி வழங்குவதாக தலைவர் கலைஞர் உறுதி அளித்தார். அதன் படி ரூ. 20 ஆயிரமாக உயர்த்தினார். அதனை தற்போது ரூ.25 ஆயிரமாக உயர்த்தி வழங்கியுள்ளார். இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் மகளிர் மேம்பாட்டிற்கு இவ்வளவு திட்டங்கள் நிறைவேற்றப்படுகிறதா என்பது கேள்விக் குறியாகும்.

சொத்தில் சம உரிமை பெண்களுக்கு வழங்க 1989 ஆம் ஆண்டு சட்டமன்றத்தில் சட்டம் நிறைவேற்றினார். ஈரோட்டுச் சிங்கம் பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்கள் 1929 ஆம் ஆண்டு செங்கல்பட்டில் நடைபெற்ற சுயமரியாதை மாநாட்டில் பலத் தீர்மானங்களை நிறைவேற்றினார். அதில் முக்கியமானது பெண்களுக்கு சொத்தில் சம உரிமை வழங்க வேண்டும் என்பதாகும். அதனை 60 ஆண்டுகள் கழித்து 1989 ஆம் ஆண்டு சட்டமாக நிறைவேற்றி தந்தை

**பெரியாரின் கனவை நிறைவேற்றியவர் தான் தலைவர் கலைஞர் அவர்கள். 1938 ஆம் ஆண்டு தமிழகத்து மகளிர் எல்லாம் ஒன்று கூடி அதுவரை ஈ.வெ.ராமசாமி என்று அழைக்கப்பட்டுவந்த தந்தை பெரியாருக்கு 'பெரியார்' என்று பட்டம் சூட்டினர். பெண்களின் முன்னேற்றத்திற்காக வாழ்நாள் எல்லாம் பாடுபட்ட தந்தை பெரியாரின் கனவுகளை நிறைவேற்றியவர் தான் தலைவர் கலைஞர். வேலைக்கு செல்லும் பெண்களின் பாதுகாப்புக்காகவும், மகளிர் வசதியாக தங்கும் வகையில் சென்னை கடலூர், மதுரை, புதுக்கோட்டை, தூத்துக்குடி, திருச்சி, ஒசூர் ஆகிய 8 இடங்களில் மகளிர் விடுதிகளை அரசே நடத்தி வருகிறது. சென்னை மற்றும் சென்னை புறநகர் பகுதிகளை சேர்ந்த மகளிர் பயன்பெறும் வகையில் இந்த விடுதி கட்டப்பட்டுள்ளது. இந்த விடுதியை பயன்படுத்தும் பெண்கள் இதை பேணி பாதுகாக்க வேண்டும். பெண்களுக்கு இதனைப் பற்றி அறிவுரை சொல்லத் தேவையில்லை. ஒவ்வொரு வீட்டையும் பாதுகாப்பதே பெண்கள் தான். அதுபோல் இந்த விடுதியையும் பயன்படுத்தி தங்கள் வாழ்வை வளமாக்கி கொள்ள வேண்டும் எனக் கேட்டு விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.**

**இவ்வாறு மு.க.ஸ்டாலின் அவர்கள் பேசினார்கள்.**

**மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி பி.கீதா ஜீவன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற விழாவில், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. தா.மோ.அன்பரசன், சென்னை மாநகர மேயர் திரு. மா.சுப்பிரமணியன் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள். சமூக நலத்துறை செயல ாளர் திரு.பா.இராமமோகன ராவ் அனைவரையும் வரவேற்றார். ஆணையர் திருமதி எம்.பி.நிர்மலா நன்றியுரையாற்றினார். விழாவில் தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக்கழகத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.விபாகர் சர்மா, சென்னை மாநகராட்சி 8வது மண்டல குழுத்தலைவர் திரு.கே.ஏழுமலை, மாநகராட்சி உறுப்பினர் திரு. சுப.முத்துவேல் ஆகியோர் கலந்து கொண்டனர்.**

வெளியீடு:

இயக்குநர், செய்தி, மக்கள் தொடர்புத்துறை,
தலைமைச் செயலகம், சென்னை – **9.**